12.03.2026

MCOP.21/2025

ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–

எனது வயது, வருமானம் குறித்த ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பால்வியாபாரம் ஏஜேன்சி எடுத்து செய்து வருவதை குறித்து ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எடையூர் காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் எதிரே அடையாளம் தெரியாத வாகனம் மோதி சென்றதாக சொல்லியுள்ளேன். அந்த புகாரில் வாகனம் ஓட்டுநர் என்பதும் தெரியவில்லை என குறிப்பிட்டுள்ளேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றேன், அந்த வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. இந்த விபத்தானது தார் ரோட்டில் நடுபகுதியில் தான் நடந்தது என்றால் சரிதான். இரண்டு வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை ஓரமாக மோதி தான் விபத்து ஏற்பட்டது. நான் தான் சாலையின் வலது புறம் ஏறி விபத்து ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானது. நான் நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் எனது வாகனத்தை காப்பீடு செய்துள்ளதால் அந்த நிறுவனத்தையும் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல்

செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.8-ல் எனது பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் முன்தொகை செலுத்தியதற்கான பில் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ம.சா.ஆ.8- ஆவணத்தில் உள்ள சில பில்களில் தொகை செலுத்தியதற்கான சீல் எதும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் என்னுடையது அல்ல என்றும், உண்மைக்கு மாறான பில்களை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. முன்தொகை பில்களையும், இறுதியாக செலுத்திய பில்களையும் சேர்த்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த மருத்துவ பில்கள் எல்லாம் உரிய சட்டப்படியான பில்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அதே பால்வியாபாரம் தான் செய்து வருகிறேன் என்றால் இல்லை வீட்டில் தான் இருந்து வருகிறேன். எனது கையில் இரும்பு பிளேட் வைத்துள்ளார்கள் அதனால் சரியாக வேலை செய்யமுடியவில்லை. இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்றும், எனது அலட்சியமும், கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சொன்னால் சரியல்ல. கோரியுள்ள நஷ்டஈடு தொகை மிகமிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், அந்த வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய பக்கிரிசாமி

த/பெ. கருணாநிதி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் ஆமாம். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், 1ம் எதிர்மனுதார் காப்புரிமை விதிகளை மீறி நடந்து வந்துள்ளதால், இந்த 2ம் எதிர்மனுதாரர் எந்த வித நஷ்டஈடு தொகையும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :- இல்லை**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.